1972 ஆகஸ்ட் 21]

* 228 வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா .—

வேலூர் காட்பாடிக்கு இடையே பாலாற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலம், பலவீனமாகவும், பழையதாகவும் இருப்பதால், புதுப்பாலம் ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடலூர்-சித்தூர் ரோட்டில் 119/2-5 மைலில் பாலாற்றின் குறுக்கே உள்ள பாலத்தை ரூ. 60 லட்சம் செலவில் திருத்தி அமைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. வேலை நடந்தேறி வருகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த வேலை எப்பொழுது முடிவு அடையும் என்று அறிவிப்பார்களா ? அதுகூட எஸ்டிமேட் தொகைக்கு மேலாக அதிகமாகச் செலவு செய்யப்பட்டால் அதற்காக வரி என்று போட்டு விடுகிறார்கள். எனவே அப்படி ஏற்பட்டால் எஸ்டிமேட் தொகைக்குள்ளாகவே பாலத்தை முடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெண்டர்கள் கேட்கப்பட்டு 17.64 சதவீதம் என்ற அளவிற்கு விடப்பட்டிருக்கிறது. எப்பொழுது முடிவு அடையும் என்ற விவரம் இல்லை.

* 229 வின—திரு. சி. இராமநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருப்புனவாசல்-ஓரியூர் சாலைகளை இணைக்க திருப்புனவாசல் அருகில் பாம்பாற்றின் குறுக்கே பாலம் ஒன்றினைக் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பரிசீலனையிலுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த மேம்பாலங்கள் கட்டுவதற்காக ஆகும் செலவிற்காகத் தனியாக ஸ்பெஷல் வரி போடுகிறார்கள், அதன் காரணமாக காருக்கு இவ்வளவு வரி, வண்டிக்கு இவ்வளவு வரி என்று போடுகிறார்கள். என்ன என்ன முறையிலே போடுகிறார்கள், எவ்வளவு நாளைக்குப் போடுவார்கள், எந்த அடிப்படையிலே வசூலிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செலவு செய்யப்பட்ட தொகை வசூலிக்கப்படுகின்ற வரையில் அந்த டோல் வாங்கப்படும்.